# மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

## நிலையறி பரீட்சை – 2021

## நிகழ்நிலையாகவும் மென்பிரதியாகவும்

தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் 6**

இரண்டு மணித்தியாலங்கள்

### பகுதிI

**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. “ ஈ.்.பண்டியை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்”. இதில் வரும் மகிழ்ச்சி என்பதன் ஒத்த கருத்துச் சொல்?

1. இன்பம் 2. சோகம் 3. துன்பம் 4. உவகை

02. “ கொற்றவன் வழி மக்களும் மனம் மாறினர்”. இங்கு கொற்றவன் என்பதன் பொருள்?

1. ஆரணியம் 2. வேந்தன் 3. தனயன் 4. பகலவன்

03. “தாய் தன் மகனை விருப்புடன் அழைத்தாள்”. இதில் விருப்பு என்பதன் எதிர்ப்பதம்?

1. பரிவு 2. ஆசை 3. வெறுப்பு 4. நிராசை

04. குளவிக்கூட்டைக் கடுவன் கல்லெறிந்து கலைத்தது. இதில் வரும் கடுவன் என்பதன் பெண்பாற் சொல்?

1. பெட்டை 2. பிடி 3. மந்தி 4. பேடு

05. அறிவு, ஆற்றல், விவேகம், புத்தி, வித்தை என்ற பல பொருள் குறிக்கும் ஒருசொல்

1. துன்பம் 2. ஞானம் 3. பேதைமை 4. அறிவின்மை

06. நாட்டு மக்கள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தனர். இங்கு சீரும் சிறப்பும் என்பது?

1. அடுக்குத் தொடர் 2. அடுக்கிடுக்குத் தொடர்
3. இணைமொழி 4. உவமைத் தொடர்

07. முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை

1. 18 2. 247 3. 30 4. 12

08. புலவர்கள் பாடல்களைப் பாடுகின்றனர். இதில் எழுவாய் சொற்றொடர்

1. பாடல்களை 2. பாடுகின்றனர் 3. புலவர்கள் 4. பாடல்

09. ‘பூக்கள் மணம் வீசும்.’ இதில் பூக்கள்

1. பெயர்த்தொடர்
2. பெயரெச்சம்
3. வினைமுற்றுத்தொடர்
4. எழுவாய்த்தொடர்

10. அறைகூவல் என்பதன் பொருள்

1. போட்டிக்கு அழைத்தல்
2. வேள்வி நடத்துதல்
3. கடின பூமி
4. வாடகைக்கு விடல்

11. செயலை முடிக்க முனைந்து நிற்றல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்

1. கைகட்டல் 2. கைகொடுத்தல் 3. கங்கணங்கட்டல் 4. மல்லுக்கட்டல்

12. பின்வருவனவற்றில் இரட்டைக்கிளவி

1. மெல்லமெல்ல 2. சின்னஞ்சிறிய 3. சலசல 4. அக்கம்பக்கம்

13. கேட்டவர்களுக்கு இல்லை என்று கூறாது கேட்ட பொருளைக் கொடுப்பவர்

1. உத்தமர் 2. வள்ளல் 3. உலோபி 4. நாயகன்

14. புதிய ஆத்திசூடியைப் பாடியவர்

1. ஔவையார் 2. பாரதியார் 3. புகழேந்தி 4. அடிகன்

15. மதில் மேல் பூனைபோல் என்ற உவமைத் தொடரின் கருத்து

1. இணை பிரியாமை
2. பயனற்றது
3. முடிவெடுக்க முடியாமை
4. இன்பத்தில் இன்பம்

16. தையலை உயர்வு செய், இதில் “தையல் ” என்பதன் பொருள்

1. ஆண்கள் 2. அறிவுள்ளவர்கள் 3. பெண்கள் 4. நெசவு

17. ஆழமறியாது காலை விடாதே என்ற பழமொழியின் கருத்து

1. ஒற்றுமையே பலம்
2. வறுமையில் செம்மை
3. இறப்பு நிச்சயம்
4. ஆராய்ந்து செய்

18. வெண்டி+காய் எனபுணரும் போது வருவது

1. வெண்டிக்காய் 2. வெண்டக்காய் 3. வெண்டிகாய் 4. வெண்காய்

19. பெயராகவும் வினையாகவும் வராதசொல்

1. படி 2. கடி 3. நடி 4. பிடி

20. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக

அ. அது உலகம் முழுவதற்கும் பொதுவான நீதியை எடுத்துரைக்கின்றது

ஆ. அவற்றுள் திருக்குறள் ஈடு இணையற்றது

இ. அது பழமையான நாகரிகம் படைத்த நாடு

ஈ. அங்கே சங்ககாலத்திலிருந்தே பல நூல்கள் தோன்றின

உ. தமிழ்நாடு பாரதகண்டத்தில் அமைந்துள்ளது

ஊ. அதனால் உலகப் பொதுமறை என போற்றப்படுகின்றது

1. இ,ஈ, அ, உ, ஆ, ஊ
2. அ, ஆ, இ,ஊ, உ,ஈ
3. உ, இ,ஈ, ஆ, அ, ஊ
4. உ,ஈ, ஆ, அ, இ, ஊ

( 20 x 1 = 20புள்ளிகள் )

## பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01) பின்வரும் தலைப்புகளுள் ஏதாவதொன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரைஎழுதுக.

1. நான் கண்டகனவு
2. வீட்டுத் தோட்டத்தின் பயன்கள்
3. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்
4. நான் ஒரு பறவையானால்

( 15புள்ளிகள் )

02) பாடசாலையில் இடம்பெற்ற கொரோனா விடுமுறைகால கற்றல் செயற்பாடுகள் குறித்து 75 சொற்களில் உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

( 10புள்ளிகள் )

03) பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

உழவுமகன் எழுந்தான்
உழைப்பின் இறைவன் இவன் என
உலகம் வணங்கிட . . .

ஏரினைத் தூக்கிபாரினைக் காக்கும்
உழவன் எங்கள் உழவன்
காலைக் கதிரவன் கைகளை நீட்டி
வாழ்த்த எழுந்தான் உழவன்

காற்றினைத் தின்று சேற்றினைத் தின்று
இரத்த வியர்வை விதைத்தான்
ஆற்றினைக் கட்டி ஆவியைக் கட்டி
உலகம் வாழ உழைத்தான்

1. உழைப்பின் இறைவன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்?
2. இப் பாடலில் காட்டப்படுகின்ற உழவுத்தொழிலின் உபகரணம் ஒன்று தருக.
3. உழவனின் உழைப்பு எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
4. உழவனை வாழ்த்துவது யார்?
5. பொருள் தருக.

அ). இரத்தம் –    ஆ). ஆவி –

( 5 x 2 = 10புள்ளிகள் )

04) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. சேய் எலி கூறும் சேவலின் தோற்றம் இரண்டினைக் குறிப்பிடுக.
2. காகத்திற்கும் நாய்க்கும் இடையிலுள்ள ஒற்றுமை, வேற்றுமை யாது?
3. "சரித்திரந் தேர்ச்சி கொள் "என்பதன் பொருளினைத் தருக.
4. தென்னைமரக் கும்மி எனும் பாடலில் பந்தல் இடப்படுவதாகக் கூறப்படும் இடங்கள் 04 தருக.
5. அறிவண்ணன், ஓடும் பறவைகளாக எவற்றைக் குறிப்பிடுகிறார்?

( 5 x 3= 15புள்ளிகள் )

05) ஒழுங்கின்றிக் காணப்படும் சொற்களை ஒழுங்குபடுத்தி வசனமாக்குக

1. குலையாத் /பழங்கள் /குலை/திராட்சைப் /தொங்கின
2. அன்பாக/அவன் /வரவேற்றான்/விருந்தினரை
3. தொடங்குகிறது/விலகத் /மெல்ல/ இருள்
4. பிழிந்து/கரும்பை/ஆலையிலே/சாறாக்குவார்கள்
5. செல்வோம் /நானும் /நீயும் /விழாவிற்குச்

( 5 x 1 = 5புள்ளிகள் )

06) பின்வரும் சொற்களை வைத்து கருத்துற வாக்கியம் அமைக்குக.

1. ஆணை :
2. ஆனை :
3. ஊண் :
4. ஊன் :
5. இலை :

( 5 x 1 = 5புள்ளிகள் )

07) கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான எழுவாய், பயனிலைகளை எழுதுக.

1. குரவை வணங்கிப் போற்றுதல் ________________________________
2. ________________________ இனிமையாகப் பாடினார்
3. நீங்கள் பதிலை_________________________________________
4. ________________ உண்மை பேசி உத்தமனாக வாழ்
5. ________________________எலி பிடிக்கும்

( 5 x 2 = 10புள்ளிகள் )

08) பின்வரும் வாக்கியங்களின் வழு நீக்கி எழுதுக.

1. வெயிளின் அறுமை நிலளில் தெறியும்
2. சிகாமணிதன் மூக்கைச் சொரிந்துகொண்டு சுற்ரும் முற்ரும் பார்த்துக் கொண்டிருந்தான்
3. உளவர்கள் வயளுக்குச் செல்லும் காட்ச்சி அளகானது

( 10 x 1 = 10புள்ளிகள் )